Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556

செய்தியாளர்கள் தேவை


தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 21 · வெள்ளிக்கிழமை Friday · 21.11.2025 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# ரூ.59.93 கோடி செலவிலான கல்விசார் கட்டடங்கள்

## முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்




சென்னை: உயர்கல்வித் துறை சார்பில் ரூ.59.93 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், உதவிப் பேராசிரியர்கள், உதவி நூலகர்கள் மற்றும் உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் கடலூர், விழுப்புரம், திருப்பத்தூர், அரியலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 59 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை முதல்வர் ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்து, தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) மேம்படுத்திடும் வகையில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர் கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசு பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயிலப் "புதுமைப்பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயிலத் "தமிழ்ப் புதல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூபாய் 1000 உதவித்தொகை வழங்குதல், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குச் சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

திறந்து வைக்கப்பட்ட உயர்கல்வித் துறை கட்டடங்களின் விவரங்கள்: உயர்கல்வித் துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் கடலூர் மாவட்டம், வடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 71 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம். திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 14 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 15 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், மயிலாடுதுறை மாவட்டம், மணல்மேடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிவறைத் தொகுதிக் கட்டடம் என மொத்தம் 59 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, உயர்கல்வித் துறை சார்ந்த கட்டடங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் உலகத்தரமான தொழிற்துறை 4.0 தரங்களுக்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) 2,590.303 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதற்கு Tata Technologies Limited நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வி ஆணையரகத்திற்கும் இடையே முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது, தொழிற்துறையுடன் இணைந்து கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்புகளை நவீனமயமாக்குதல், புதியதொழிற்சார்பாடத்திட்டங்களை உருவாக்குதல், ஆசிரியர்களின் கற்பித்தல்திறனைமேம்படுத்துதல், மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு களை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டுள்ளது. மேலும், இத்திட்டம் தொழிற்துறையின்தற்போதையமற்றும் எதிர்காலத்தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திறன்மிக்க மனித வளங்களை உருவாக்க உதவுவதோடு, தொழிற்துறை மற்றும் கல்வித் துறைக்கிடையேயான இடைவெளியைக் குறைத்து, தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சி பெற்ற, உயர்திறன்மிக்க தொழில்நுட்பவல்லுநர்களாக மாணவர்கள் உருவாக்கப்படுவர்.

# 10வது முறையாக பீஹார் முதல்வராக நிதிஷ் பதவியேற்பு; பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பு




பாட்னா: ஐக்கிய ஜனதா தள தலைவர் நிதிஷ் குமார், பீஹார் முதல்வராக 10வது முறையாக (நவ.,20) பதவி ஏற்றார். விழாவில், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பீஹாரில் நடந்த சட்டசபை தேர்தலில், ஆளும்தேசிய ஜனநாயக கூட்டணி, 202 இடங்களை பிடித்து அமோக வெற்றி பெற்றது. கூட்டணியில் இடம் பெற்ற பா.ஜ., 89; ஐக்கிய ஜனதா தளம் 85; லோக் ஜனசக்தி ராம்விலாஸ்பஸ்வான் கட்சி 19; ஹிந்துஸ்தானி அவாம் மோர்ச்சா 5, ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4 இடங்களை பிடித்தன. என்.டி.ஏ., எனப்படும், தேசிய ஜனநாயக கூட்டணியின் புதிய எம்.எல்.ஏ.,க்கள் பங்கேற்ற கூட்டம் பாட்னாவில் நடந்தது.

இதில் தற்போதைய முதல்வரும் ஐக்கிய ஜனதா தள தலைவருமான நிதிஷ் குமார் தே.ஜ.., கூட்டணி எம்.எல்.ஏ.,க்கள் குழுவின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து, பீஹார் முதல்வராக, 10வது முறையாக இன்று (நவ.,20) நிதிஷ் குமார் பதவி ஏற்றார். கவர்னர் ஆரிப் முகமது கான் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

26 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொண்டனர். துணை முதல்வராக பாஜவை சேர்ந்த சாம்ராட் சவுத்ரி, விஜய் குமார் சின்ஹா ஆகியோர் பதவியேற்றனர். சட்டசபை தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணியின் வரலாறு காணாத வெற்றிக்கு, பீஹார் மாநில மக்களுக்கு பிரதமர் மோடி, முதல்வர் நிதிஷ் குமார், தேஜ கூட்டணி தலைவர்கள் நன்றி தெரிவித்தனர். காந்தி மைதானத்தில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த விஜய் குமார் சவுத்ரி, பிஜேந்திர பிரசாத் யாதவ், ஷ்ரவன் குமார், அஷோக் சவுத்ரி, லேசிசிங், மதன் சாஹ்னி, சுனில் குமார், முகம்மது ஜமா கான் ஆகிய 8 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) கட்சியின் சஞ்சய் குமார் சிங், சஞ்சய் குமார் ஆகிய இருவரும், இந்துஸ்தானி அவாமி மோர்ச்சாவைச் சேர்ந்த சந்தோஷ் குமார் சுமன் என்பவரும், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சாவின் தீபக் பிரகாஷும் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

இதன்மூலம், பாஜக 14, ஐக்கிய ஜனதா தளம் 8, லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) 2, இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா – 1, ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா – 1 என மொத்தம் 26 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வாகி உள்ளதை அடுத்து, வரும் 26–ம் தேதி சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும், புதிய உறுப்பினர்கள் பதவியேற்பார்கள்.

# டெல்லி செங்கோட்டை குண்டுவெடிப்பு வழக்கில் மேலும் 4 பேர் கைது; என்ஐஏ நடவடிக்கை




புதுடெல்லி:
டெல்லி செங்கோட்டை கார் குண்டுவெடிப்பு வழக்கில் மூன்று மருத்துவர்கள் உட்பட 4 பேரை என்ஐஏ கைது செய்துள்ளது. இதன்மூலம் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

காஷ்மீரைச் சேர்ந்த மருத்துவர் உமர் நபி, கடந்த 10–ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டுவெடிப்பு மூலம் தற்கொலை தாக்குதலில் ஈடுபட்டார். இதில், சம்பவ இடத்திலேயே உடல் சிதறி அவர் உயிரிழந்தார். இந்த வெடிவிபத்தில், சாலையில் பயணித்த மேலும் 13 பேர் உயிரிழந்தனர். 30–க்கும் மேற்பட்டோர்படுகாயமடைந்தனர்.

இந்த குண்டுவெடிப்பு குறித்த வழக்கை முதலில் டெல்லி போலீசார் மேற்கொண்ட நிலையில், இதன் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு மத்திய உள்துறை அமைச்சகம் இதனை தேசிய புலனாய்வு அமைப்பிடம் (என்ஐஏ) ஒப்படைத்தது. இதனையடுத்து,

இந்த சம்பவம் குறித்து விசாரிக்க 10 பேர் கொண்ட சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்றை என்ஐஏ அமைத்தது.

குண்டுவெடிப்பு குறித்து தீவிரமாக விசாரணை நடத்திய என்ஐஏ சிறப்பு விசாரணைக் குழு, இது ஒரு தீவிரவாத தற்கொலை தாக்குதல் என அறிவித்தது. மேலும், இந்த கார் குண்டுவெடிப்பு வழக்கில் தொடர்புடைய கார் உரிமையாளர் அமிர் ரஷித் ஆல்வியை என்ஐஏ கடந்த 16–ம் தேதி கைது செய்தது.

இதனையடுத்து, கடந்த 17–ம் தேதி இந்த குண்டுவெடிப்பு வழக்கில் தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய டேனிஷ் எனும் ஜசிர் பிலால் வானியை என்ஐஏ கைது செய்தது. காஷ்மீரைச் சேர்ந்த இவர், குண்டுவெடிப்பை நிகழ்த்திய தற்கொலையாளி உமர் நபியுடன் இணைந்து இந்த தாக்குதலுக்கு திட்டமிட்டதாக என்ஐஏ தெரிவித்தது.

இதன் தொடர்ச்சியாக, ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவைச் சேர்ந்த மருத்துவர் முஜாம்மில் ஷகீல் கனை, அனந்தநாக்–கைச்சேர்ந்தமருத்துவர் அதீல் அகமது ராதர், உத்தரப் பிரதேசத்தின் லக்னோவைச் சேர்ந்த மருத்துவர் ஷாஹீன் சயீத், ஜம்மு காஷ்மீரின் சோபியானைச் சேர்ந்த முஃப்தி இர்பான் அகமது வாகே ஆகிய நான்கு பேரை என்ஐஏ கைது செய்துள்ளது.

டெல்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் இவர்கள் நான்கு பேரையும் என்ஐஏ காவலில் எடுத்துள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதில் தொடர்புடைய ஒவ்வொரு நபரையும் அடையாளம் காண்பதற்கான முயற்சியில் பிற பாதுகாப்பு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு வருவதாகவும் என்ஐஏ தெரிவித்துள்ளது

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



முதலமைச்சர் ஸ்டாலின் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும்,முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகை தர உள்ளதால் மதுரை கிழக்கு வட்டம் உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே. ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள்,மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், ஆகியோர் உடன் உள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஈசூர், பூதூர், படாளம், நல்லாமூர், ஓணம் பாக்கம்,பகுதியில் நடைபெற்று வரும் எஸ் ஐ ஆர் புதிய வாக்காளர் திருத்த படிவத்தினை மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வையாவூர் வி.ஜி. குமரன், மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் முதுகரை கார்த்திகேயன், இவர்கள் ஊராட்சியில் உள்ள எஸ் ஐ ஆர் புதிய வாக்காளர் திருத்த படிவத்தினை அதிகாரிகள் முன்னிலையில் பொதுமக்களிடம் வழங்கி இந்த எஸ் ஐ ஆர் புதிய வாக்காளர் திருத்தும் பணி நடைபெற்று வருகிறது இதை மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் ஆய்வு செய்தார்.

# ஈரோடு மாவட்டத்தில் உள்ள 19,97,189 வாக்காளர்களில் நாளது வரை 19,57,983 படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

## ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்




இந்திய தேர்தல் ஆணையத்தால் 27.10.2025 அன்று வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டு,ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளில் 04.11.2025 முதல், மொத்தமுள்ள 2222 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் அனைத்து வாக்காளர்களுக்கும் இல்லந்தோறும் சென்று உரிய வழிகாட்டுதலுடன் கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள 19,97,189 வாக்காளர்களில் வரை 19,57,983 (98%) 4 உதவி வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கணக்கெடுப்பு படிவங்களும் அனைத்து வாக்காளர்களுக்கும் வழங்கும் பணி விரைவில் நிறைவடையவுள்ளது.

அதனை தொடர்ந்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் வீட்டிற்கு சென்று பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை திரும்ப பெற்று கொள்ள வருவார்கள். எனவே வாக்காளர்கள் ஏற்கனவே தங்களுக்கு வழங்கப்பட்ட படிவங்களை திரும்ப வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் சமர்ப்பிக்க ஏதுவாக கணக்கெடுப்பு படிவங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. கணக்கெடுப்பு படிவம் தவிர பிற ஆவணங்கள் கணக்கெடுப்பு காலத்தில் சமர்ப்பிக்க தேவையில்லை. இந்தப் பணிக்காக 8 வாக்காளர் பதிவு அலுவலர்கள்,44 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், 226 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் 452 கூடுதல் மேற்பார்வையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும்,பிறதுறைசார்ந்த அலுவலர்கள் இந்தப் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டு, வாக்காளரின் விவரங்கள் BLO (App) செயலியில் பதிவுற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

# ஈரோடு மாணவர்கள் தேசிய கராத்தே போட்டியில் சாதனை

மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில், 2025 நவம்பர் 15 முதல் 18 வரை



நடைபெற்ற 1st சி.பி.எஸ்.சி கராத்தே நேஷனல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஈரோடு மாணவர்கள் வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்துள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 250-க்கும் அதிகமான பள்ளிகள் கலந்துகொண்ட இப்போட்டியில்,ஈரோட்டைச்சேர்ந்த ஈரோடு பப்ளிக் பள்ளி மாணவர்கள் முதன்முறையாகப் பங்கேற்றுத் தங்கள் திறமையை நிரூபித்தனர். 7-ஆம் வகுப்பு மாணவர் நிதீசன் வெள்ளிப் பதக்கமும் அதே வகுப்பைச் சேர்ந்த கபிலன் வெண்கலப் பதக்கமும் வென்று தமிழகத்திற்குப் பெருமை தேடித் தந்தனர். இந்தச் சிறப்பானவெற்றி,ஈரோடுபப்ளிக் பள்ளி நிர்வாகத்திற்கு ம், கரா த்தே விளையாட்டுக்கும் ஒருபெரியஉத்வேகத்தை அளித்துள்ளது.

தேசிய அளவில் பதக்கம் வென்ற இந்த இளம் வீரர்கள் ஈரோடு திரும்பியபோது, ரயில் நிலையத்தில் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆசிய நடுவரான கராத்தே பயிற்சியாளர் சுரேஷ் தலைமையில், பெற்றோர்கள், சக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் திரண்டு வந்து வீரர்களைப் பாராட்டினர். பள்ளியின் தாளாளர்,முதல்வர்,ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக் குழுவினர் இந்த வரவேற்பு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து, வெற்றி பெற்ற மாணவர்களை மனதார வாழ்த்திப் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.



தென்காசி மாவட்டம் சுண்டை நகராட்சி பகுதிகளில் திமுக தெற்கு மாவட்ட செயலாளர் பொறுப்புஜெயபாலன் ,திமுகநிர்வாகிகள் நகர நிர்வாகிகள்.தி.மு.கநகர செயலாளர் கணேசன் , தி.மு.க.தெற்குமாவட்டசுற்றும்ச்சூழல்எம்.கே.முத்துக்குமார் ற்றும் சில கட்சி அமைப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு கணக்கெடுப்பு நடைபெற்று வரும் நிலையில், பொதுமக்கள் மற்றும் வாக்காளர்கள் படிவங்களை நிரப்பி வழங்க உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில்வாக்காளர்கள்ஆர்வத்துடன் படிவங்களை பூர்த்தி செய்து சமர்ப்பித்துவருகின்றனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் விரைந்து வழங்கிட வேண்டும்

சேலம் வடக்கு, சேலம் மேற்கு மற்றும் சேலம் தெற்குசட்டமன்றதொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் இராயிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டு தகவல்.




வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை வாக்காளர்களிடமிருந்து வாக்குச்சாவடி நிலைஅலுவலர்கள் பெற்று வருவது குறித்து சேலம் வடக்கு சேலம் மேற்கு மற்றும் சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆப, அவர்கள் (19.11.2025) நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்விற்கு பின் மாவட்டதேர்தல்அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் 2026 அக்டோபர் மாதம் 28 ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் கணக்கெடுப்பு பணிகள் சேலம் மாவட்டத்தில் 04.112025 அன்று முதல் டிசம்பர் 4-ம் தேதி வரையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கப்பட்டு வாக்காளர்களிடம் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெறப்பட்டு வருகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றிட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றைய தினம் சேலம்மாவட்டம்.சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்னகொல்லப்பட்டி, கன்னங்குறிச்சி மெயின் ரோடு சாமிநாதபுரம் மாணிக்கம் தெரு சாமிநாதபுரம் மருதநாயகம் தெரு. சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குப்தா நகர். அங்கம்மாள் காலனி மற்றும் சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்னமாரியம்மன் கோவில் தெரு கிச்சிப்பாளையம் பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பெற்று வரும் பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும்,தொடர்புடைய வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வாக்காளர்களில் நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்கள், இறந்து போன வாக்காளர்களின் விவரங்களை அறிந்து கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்த கணக்கீட்டுப் படிவங்களை பெற வரும் தேதியினை முன்கூட்டியே வாக்காளர்களுக்கு தெரியப்படுத்தி அனைத்து வாக்காளர்களிடமிருந்தும் கணக்கீட்டுப் படிவங்கள் பெறுவதை உறுதிசெய்திடவும் இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டது.

வாக்காளர்கள் வாக்குச்சாவடி நிலைஅலுவலர்களிடமிருந்து பெறப்பட்டவாக்காளர்பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவங்களை விரைந்து பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் கொடுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. பிருந்தாதேவி அவர்கள் தெரிவித்தார்.



ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டிகள் முதன்முறையாக தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரையில் நடைபெற உள்ளது. இதற்கான வெற்றி கோப்பை தமிழகம் முழுவதும் பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில்புஞ்சைபுளியம்பட்டிக்குவருகைதந்தஉலககோப்பைக்குதுணைஆட்சியர் சிவானந்தம் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.பின்னர் கோப்பை ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM


மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☏ +919444082959



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகேயுள்ள, பாரியூர் கொண்டத்து காளியம்மன் கோவிலில், நடப்பாண்டில் குண்டம் தேர்த்திருவிழா டிசம்பர் 25ல், பூச்சாட்டுதலுடன் துவங்குகிறது. அதையடுத்து வரும், 2026 ஜனவரி 5ல், சந்தனக்காப்பு அலங்காரம், 8 ம் தேதி பக்தர்கள் பூ மிதிக்கும் குண்டம் திருவிழா, 9 ம் தேதி திருத்தேரோட்டம், 10 ம் தேதி மலர் பல்லக்கு உற்சவம், 17ம் தேதி மறுபூஜை நடைபெற உள்ளது.

# தாராபுரத்தில் பொதுகழிப்பிடத்தில் போதை ஆசாமிகள் தொல்லை





திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தாலுகா இறைச்சி மஸ்தான் நகரில் கொடிக்கம்பம் சந்து எதிரில் உள்ள பொதுக் கழிப்பிடத்தில் எந்த நேரமும் போதை ஆசாமிகள் மது அருந்துவதால் பெண்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது மது அருந்திவிட்டு பொதுக்களிப்பிடத்தில் உள்ள மரத்துக்கு அடியில் அரைகுறையாக ஆடைகளை கலைந்து படுத்து கிடப்பதும் வழித்தடத்தில் மது அருந்திவிட்டு வாந்தி எடுப்பதும் போன்ற செயல்களால்பெண்களும் பொதுமக்களும் பொதுக்களிப்பிடத்திற்கு செல்ல மிகவும் அச்சப்படுகிறார்கள் அங்குள்ள மக்களுக்கு அருகாமையில் உள்ள இந்த கழிப்பிடத்தால் போதை ஆசாமிகளின் தொல்லை அதிகமாக உள்ளதால் பொதுமக்களும் பெண்களும் மிக வேதனைப்படுகிறார்கள் அதுமட்டுமில்லாமல் பொதுக்களிப்பிடத்தில் சரியான பராமரிப்பு இல்லை என அப்பகுதி மக்கள் வேதனை

# வாக்காளர் பட்டியலில் பொதுமக்கள் அனைவரும் தங்கள் வாக்குரிமையை நிலைநாட்ட விழிப்புடன் செயல்பட வேண்டும்

## அமைச்சர் கீதாஜீவன் வேண்டுகோள்



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், பொதுமக்கள் அனைவரும் தங்கள் வாக்குரிமையை நிலைநாட்ட விழிப்புடன் செயல்படுமாறு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதாஜீவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில், தற்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் அமல்படுத்தியுள்ளது. வாக்காளர்கள் கணக்கீட்டு படிவங்களை நிரப்பும் முறை குறித்து பொதுமக்களிடையே பல்வேறு குழப்பங்கள் நிலவி வருகின்றன. 2002ம் ஆண்டு வாக்காளர் விவரங்களைத் தேடுவது அவர்களுக்கு மிகுந்த சிரமமாக உள்ளது. இப்பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு போதிய கால அவகாசம் இல்லை.

அவர்கள் தங்கள் வழக்கமான பணியை முடித்துவிட்டு, கணக்கீட்டு படிவங்களை வழங்கி திரும்பப் பெறும் பணிகளை செய்து வருகின்றனர். பொதுமக்கள் தங்கள் விவரங்களை கவனத்துடன் நிரப்பி, வரும் டிச.4ம் தேதிக்குள் அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்களிடமோ வழங்கலாம். அவ்வாறு திரும்ப வழங்கும்போது, நிரப்பிய இரண்டு படிவங்களில் ஒன்றை தங்களிடம் அத்தாட்சியாக வைத்துக் கொண்டு, மற்றொன்றை தேர்தல் அலுவலரிடம் வழங்க வேண்டும்.

பின்னர் டிச.9ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்போது தங்கள் வாக்கு சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து கொள்ள வேண்டும். வாக்கு சேர்க்கப்படாவிட்டால் மீண்டும் சேர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்கள் தங்கள் வாக்குரிமை பறி போகாத வகையில் பாதுகாக்க விழிப்புடன் செயல்பட வேண்டும். தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் தூத்துக்குடி, விளாத்திகுளம், கோவில்பட்டி ஆகிய 3 தொகுதிகளிலும் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் தன்னார்வலர்களைக் கொண்டு உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் வரும் 22ம் தேதி (சனிக்கிழமை) அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடைபெறும் சிறப்பு முகாம்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு கூட்டம்

## கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் பங்கேற்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு கூட்டம்



வாரந்தோறும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் நடைபெறுவதை முன்னிட்டு இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் தலைமையில் குறைதீர்க்கும் மனு கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் உத்தரவின்படி ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைதோறும் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது.

அதன்படி நேற்று தூத்துக்குடி மாவட்டத்தில் காவல் நிலையங்களில் புகார் அளித்த 2 மனுதாரர்கள் மற்றும் புதிதாக மனு கொடுக்க வந்த 71 மனுதாரர்கள் என மொத்தம் 73 மனுதாரர்கள் தங்கள் குறைகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நேரடியாக தெரிவித்து புகார் மனு அளித்தனர். குறைகளை கேட்டறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உடனடியாக விசாரணைமேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வாரந்தோறும் புதன்கிழமைகளில் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக பொதுமக்கள் குறைதீரக்கும் மனு கூட்டம் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட மனுக்களின் விசாரணையில் திருப்தி அடையாத புகார்தாரர்கள் நேரில் ஆஜராகி தங்களின் கருத்துக்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் தெரிவிக்கலாம் என்பதனை மாவட்ட காவல்துறை சார்பாக தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தமிழகத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது மேலும் நெடுந்தூரம் நெடுஞ்சாலைகள் அமைந்துள்ளதால் அடிக்கடி நான்கு வழி சாலைகளில் விபத்துகள் ஏற்படுகிறது விபத்துகளில் காயம் அடைந்தவர்கள் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் இந்த நிலையில் உயிர் காக்கும் முயற்சி அளிக்கும் வகையில் அடுக்கு மாடி கட்டிடங்கள் மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள நிலையில் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் உயிர்க்காக்கும் உயர் மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் போதிய மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் பற்றாக்குறை இருந்து வருகிறது அதனால் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களின் காலி பணியிடங்களில் நிரப்ப வேண்டும் என வழியுறுத்தி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் இன்று மதியம் உளுந்தூர்பேட்டை பஸ் நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் மாவட்டத் தலைவர் சதீஷ்குமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் சிவகுமார் மாநில குழு உறுப்பினர் கஸ்தூரி உட்பட மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வாலிபர் சங்கத்தினர் உட்பட பலர் திரளாக கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்

# ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் நடைபெற்ற இலவச பயிற்சி வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களை பாராட்டி கேடயம் வழங்கினார்

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் நடைபெற்ற இலவச பயிற்சி வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களை பாராட்டி கேடயம் வழங்கினார். இக்கூட்டரங்கில் நேற்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக (20.11.2025) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தின் மூலம் நடைபெற்ற இலவச பயிற்சி வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களை பாராட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் கேடயம் வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பேசும் தெரிவித்ததாவது

ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி மையத்தில் TNPSC Group I, II/IIA, IV, TNUSRBSI, PC, SSC, RRB, BANKING, Health Inspector தொழில்நுட்ப தேர்வுகளுக்கு, தேர்வு அறிவிக்கைகளுக்கிணங்க இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்பில் கடந்த 06.08.2025 அன்று அறிவிக்கப்பட்ட கூட்டுறவு உதவியாளர் பணிகளுக்கான இலவச பயிற்சி வகுப்பு இணையதளம் வாயிலாக நடத்தப்பட்டது. இதில் 100-கும் மேற்பட்ட மாணவ. மாணவியர்கள் பயிற்சி பெற்றனர். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக 59 முறை இணையவழி வகுப்புகள் நடத்தப்பட்டது.

தற்போது தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில் மாநில ஆட்சேர்ப்பு வாரியத்தின் கூட்டுறவு உதவியாளர் பணிக்கான தேர்வில் 7 மாணவ மாணவியர்களும், மாவட்ட அளவிலான கூட்டுறவு உதவியாளர் பணிக்கான தேர்வில் 48 மாணவ மாணவியர்களும் என மொத்தம் 55 நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் மாநில ஆட்சேர்ப்பு வாரியம்மற்றும்மாவட்ட ஆட்சேர்ப்பு வாரியம் இரண்டிலும் 7 நபர்கள் தேர்ச்சி பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மேற்படி தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுடன் நேரில் சந்தித்து கலந்துரையாடி கேடயம் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.





தொடர்ந்து, மாவட்ட பதிவாளர் கூட்டுறவு (ஓய்வு) தியாகராஜன் அவர்கள் எதிர்வரும் நேர்காணல் தேர்வுக்கான நுணுக்கங்களை மாணவ, மாணவியர்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் உதவி இயக்குனர் ரா.ராதிகா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சாந்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## டிசம்பர் 3 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு பள்ளியில் பயின்று வரும் மாணவ/ மாணவியர்களுக்கு ஓவியப்போட்டியினை துவக்கி வைத்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (20.11.2025) டிசம்பர் 3 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு பள்ளியில் பயின்று வரும் மாணவ/மாணவியர்களுக்கு ஓவியப் போட்டியினைமாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார். டிசம்பர் 3 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு பள்ளியில் பயின்று வரும் மாணவ. மாணவியர்களுக்கான ஓவியப் போட்டியினை இன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த ஓவியப்போட்டியில் செவித்திறன் குறையுடையோருக்கான மேல் நிலைப்பள்ளி, கொங்கு சிறப்பு பள்ளி, அரிமா சிறப்பு பள்ளி, கோகுலம் சிறப்பு பள்ளி, உதயம் சிறப்பு பள்ளி மற்றும் அன்பு சிறப்புப் பள்ளிகளில் பயின்று வரும் மொத்தம் 81 மாணவ மாணவியர்கள் ஓவியப்போட்டிகளில் கலந்து கொண்டனர். இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு டிசம்பர்-3 அன்று நடைபெறும் உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, மாணவ, மாணவியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.









ஈரோடு தாளவாடி தலைமலை தொட்டபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவிலின் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தைநண்பர்கள்இணைந்துஅமாவாசையைமுன்னிட்டு11ஆவதுமாதமாகஅன்னதானம் செய்தனர். இதில் தொழிலதிபர் சிவப்பிரகாசம் அவர்கள் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக டெக்ஸ்வேலி நிர்வாகி கோபால் பூபதி ஆயில் மில் ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினர். இதனைத்தொடர்ந்து கொங்கலம்மன்கோவில்வீதியில்மேலும்600பேருக்குஅன்னதானம் வழங்கப்பட்டது. வந்திருந்த அனைவருக்கும் அறக்கட்டளையின் நிர்வாகிகள் நன்றி தெரிவித்தனர்.

# கல்பாக்கத்தை ஒட்டிய கடலோர பகுதிகளில் பாதுகாப்பு ஒத்திகை

## ஈசிஆர் சாலையில் வாகன சோதனை தீவிரம்



தமிழகத்தில் கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுருவுவதை தடுப்பதற்காக பாதுகாப்புப் படையினர் ஆண்டுதோறும் பல்வேறு ஒத்திகை நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கடலோர பாதுகாப்பு குழும போலீஸாரும் உள்ளூர் சட்டம்-ஒழுங்கு போலீஸாரும் இணைந்து சாகர் கவாச் எனப்படும் கடல் பாதுகாப்பு ஒத்திகையை தொடங்கியுள்ளனர். இன்றும் நாளையும் இந்த ஒத்திகை நடைபெற உள்ளது.

ஒத்திகையின் முதல் நாளான இன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கடலோர கிராமப்பகுதிகளில் கடலோர பாதுகாப்பு குழுமத்தினர் மற்றும் போலீஸார் கடற்கரை யில் தீவிர ரோந்து மற்றும் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், சர்வதேச சுற்றுலா தலமான மாமல்லபுரத்திலும், சென்னை அணுமின் நிலையம், இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள கல்பாக்கம் பகுதிக்கு செல்லும் சாலையிலும் சதுரங்கப்பட்டினம் போலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். கல்பாக்கம் உள்பட கடலோர கிராமப்ப குதிகளிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதவிர, தீவிரவாதிகள் போல் கடல் வழியாக ஊடுருவ முயலும் நபர்களை பிடிக்கும் ஒத்திகையில் போலீஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்கரையில் கண்காணிப்பு மற்றும் சோதனைகளில் கடலோர பாதுகாப்பு குழும போலீஸார் ஈடுபட்டு வரும் நிலையில், சதுரங்கப்பட்டினம், வெங்கம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஈசிஆர் சாலையில் போலீஸார் தீவிர வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# விழுப்புரம் மாவட்டம் பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் கார்த்திகை மாத அமாவாசை ஊஞ்சல் உற்சவம்

## லட்சக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்



விழுப்புரம் மாவட்டம் உலக பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் கார்த்திகை மாத அமாவாசையை முன்னிட்டு ஊஞ்சல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.இதில்லட்சக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

இதற்காக அதிகாலை முதலே நடை திறக்கப்பட்டு மூலவர் மற்றும் உற்சவர் அங்காளம்மனுக்கு பால் தயிர் பன்னீர் சந்தனம் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டது.

அதன் பின் வண்ணமலர்கள் , தங்க கவச அலங்காரம் செய்து

சர்க்கரை பொங்கல், சுண்டல்பல்வேறுவகையான பழங்களை கொண்டுநெய்வேத்தியமும் அதனைத் தொடர்ந்து தீபாராதனையும் நடைபெற்றது.

அதன்பின் நீண்ட நெடு வரிசையில் காத்துக் கொண்டிருந்த பக்தர்கள் சாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

உற்சவர் அங்காளம்மன் அருள்மிகு அண்ணாமலையார் உண்ணாமலையார் அலங்காரத்தில் பக்தர்களுக்குஅருள் பாலித்தார்.

நாள் முழுவதும் திரளான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வந்திருந்த நிலையில் இரவு பத்து முப்பது மணிக்கு மேல் பூசாரிகள் வழக்கப்படி உற்சவர் அங்காளம்மன் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சல் மண்டபத்திற்கு கொண்டுவரப்பட்டு பூசாரிகள் வழக்கப்படி தாலாட்டு பாடி தீபாரதனை எடுத்து ஊஞ்சல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

அப்போது பக்தர்கள் தீபம் ஏந்தி வழிபாடு செய்தனர்

இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கோவில் நிர்வாகம் சார்பில் கூட்ட நெரிசலை தவிர்க்க தடுப்பணைகள் மற்றும் 600 க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



ஈரோடு மாவட்டம் நம்பியூர் சி.எஸ்.ஐ தூய பேதுரு ஆலயத்தின் ஞாயிறு பள்ளி குழந்தைகள், கோவை திருமண்டல அளவில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கலை விழாவில் கலந்துகொண்டு, சிறப்பு பரிசு பெற்றனர். இந்நிகழ்வில் குழந்தைகள் நடனம் நாடகம் பாடல் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். ஆலயத்தின் ஆயர் பிரில்ராஜா மற்றும் சபை மக்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டத்தில் சிறந்த பள்ளிக்கூடம் ஆக தேர்வு செய்யப்பட்ட காசிபாளையம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி தலைமைஆசிரியர்ஜோதிமணி கடந்தவாரம் நடைபெற்ற விழாவில் பாராட்டுக்கேடயம் பெற்றுவந்தார். இந்தநிலையில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் காசிபாளையம் மாநகராட்சி தொடக்கப் பள்ளிக்கு நேரில் சென்று தலைமையாசிரியை ஜோதிமணிக்கு பாராட்டு தெரிவித்தார். மேலும் ஆசிரியை, ஆசிரியர்களும் பாராட்டு தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்ட ரயில் நிலையத்தில் அமிர்த பாரத் திட்டத்தின் கீழ் சுமார் 35 கோடி மதிப்புள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகளை தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர் என். சிங் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் பணிகள் தொடர்பான வரைபடங்கள், மற்றும் ஆய்வறிக்கையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ரயில் நிலையத்தின் முகப்பு பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளையும் ஆய்வு செய்தார். அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# செஞ்சியில் ரூ.13.92 கோடியில்கட்டப்பட்ட அரசு கலைக் கல்லூரியை காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்



விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி மேல்மலையனூர் தாலுகா உள்ளடங்கியுள்ளது. இந்த தாலுகாவில் உள்ள 200-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மேல்நிலை கல்வி பயின்று உயர்கல்வி படிப்பதற்காக திண்டிவனம், விழுப்பு ரம், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளுக்கு சென்று படிக்க வேண்டிய சூழல் நிலவி வந்திருந்தது. இதனால் பெண் பிள்ளைகளின் உயர்கல்வி பாதிக்கப்பட்டிருந்தது.சுமார் 40 ஆண்டு காலமாகசெஞ்சி பகுதியில் உயர் கல்வி படிப்பதற்காக அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் எனகோரிக்கை அளிக்கப்பட்டது.இந்நிலையில்- தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஸ்டாலினிடம் கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது செஞ்சி பகுதியில் அரசு கலைக் கல்லூரிஅமைக்கவேண்டும் என முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கோரிக்கை வைத்திருந்தார். கோரிக்கையை ஏற்று கடந்த 2022-ல் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது அந்த வகையில் 2022 – 2023ஆம்-ஆண்டுக்கான அரசு கலைக் கல்லூரியில் மாணவர் சேர்க்கையை தமிழ்நாடு அரசு அறிவித்ததையடுத்து சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக செஞ்சியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைத்து மாணவர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்.இதையடுத்து தற்காலிகமாக செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் செஞ்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வந்தது.பி.ஏ.தமிழ், ஆங்கிலம், பி.காம், பி.பி.ஏ. பி.எஸ்.சி கணிணி அறிவியியல் உள்ளிட்ட 5 பாட பிரிவுகளில் 300 மாணவ-மாணவிகள் கல்வி பயின்று வரும்

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு. க .ஸ்டாலின் அவர்கள் ரூபாய் 13.92கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய செஞ்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடத்தினை மாணவர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இதை அடுத்து செஞ்சி அரசு கலைக் கல்லூரியில்குத்து விளக்கு ஏற்றும் நிகழ்ச்சி மற்றும் புதிய கல்லூரியில் வகுப்புகள் தொடக்க விழா நிகழ்ச்சி கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர்கள் செஞ்சி மொக்தியார்அலிமஸ்தான்,அனந்தபுரம் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.செஞ்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் ஸ்ரீ வித்யா அனைவரையும் வரவேற்றார் .நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்எம்எல்ஏகலந்து கொண்டு புதிய செஞ்சிஅரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் குத்து விளக்கு ஏற்றி வைத்து மாணவர்களுக்கான வகுப்பறையை திறந்து வைத்து இனிப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:செஞ்சி தொகுதியில் அரசு கலை க்கல்லூரிஅமைக்க வேண்டும் என 40 ஆண்டு கோரிக்கையாக இருந்தது .இப்பகுதியில் மாணவர்களின் நலன் கருதி செஞ்சி பகுதியில் அரசு கலைக் கல்லூரி தேவை என்பது நீண்ட நாள் கோரிக்கையாக தொடர்ந்து இருந்து வந்தது.செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன் முதலமைச்சரிடம் செஞ்சிக்கு அரசு கலைக் கல்லூரிஅமைக்கவேண்டும் என கோரிக்கை வைத்தவுடன்செஞ்சிக்கு புதிய அரசு கல்லூரியை வழங்கி 13 கோடியே 92 லட்சம் மதிப்பீட்டில் புதிய கலை கல்லூரி கட்டிடம் கட்டிக் கொடுத்த தமிழ்நாடு முதலமை ச்சர்மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு செஞ்சி தொகுதி மக்கள் சார்பாகமனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார். நிகழ்ச்சியில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,செந்தமிழ் செல்வன் ,தமிழ்நாடு உடல் உழைப்பு நலவாரிய உறுப்பினர் செஞ்சி சிவா,மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன், ஒன்றிய பெருந்தலைவர் வல்லம்அமுதா ரவிக்குமார்,பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் முரளி,உதவி செயற்பொறியாளர்கள் வெங்கடேச பாபு ,ஹேமாநாதன், உதவி பொறியாளர்கள் வினோத், தங்கராஜ்,ஒன்றிய துணைச் சேர்மன்கள்ஜெயபாலன், விஜயலட்சுமி முருகன்,மாவட்ட கவுன்சிலர்கள் அரங்கஏழுமலை, அகிலா பார்த்திபன்,சாந்திசுப்பிரமணியன் ,செல்வி ராம சரவணன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,ஒன்றிய செயலாளர்கள்,நெடுஞ்செழியன்,விஜயராகவன், மொடையூர் துரை,இளம்வழுதி,மணிமாறன், மாவட்ட விவசாய அணிதலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், பேரூர் செயலாளர்கள் அனந்தபுரம்சம்பத்,செஞ்சி கார்த்திக்,ஒன்றிய கவுன்சிலர் பனிமலர் ராஜாராமன், ஊராட்சி மன்ற தலைவர் பச்சையப்பன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள் ,கல்லூரி மாணவ மாணவிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.கல்லூரிதமிழ் துறை தலைவர் ஆனந்தி அனைவருக்கும் நன்றி கூறினார்.

# Prashant Kishor Holds 'Maun Vrat' As Nitish Kumar Returns As Chief Minister



*Prashant Kishor Holds 'Maun Vrat' As Nitish Kumar Returns As Chief MinisterThe development came as Nitish Kumar was sworn in as Chief Minister of the State for a historic 10th time .*

*Prashant Kishor Holds 'Maun Vrat' As Nitish Kumar Returns As Chief Minister*

*Prashant Kishor took full responsibility for Jan Suraaj's poor Bihar poll performance. West Champaran (Bihar):*

*Jan Suraaj founder Prashant Kishor on Thursday held a silent introspection (Maun Vrat) at Bhitiharwa Gandhi Ashram in Bihar after not being able to open an account in the seats tally in the Assembly elections.*

*The development came as Nitish Kumar was sworn in as Chief Minister of the State for a historic 10th time in the presence of Prime Minister Narendra Modi and other NDA leaders.Earlier,in a press conference on Tuesday, Kishor had announced that he will observe a day-long silent fast at the Gandhi Bhitiharwa Ashram on November 20.*

*He said, "I will work twice as hard as you've seen me work over the past three years and put in all my energy. There's no question of backing down. There's no turning back until I fulfil my resolve to make Bihar better. "I failed to explain to the people of Bihar the basis on which they should vote and why they should create a new system. Therefore, as atonement, I will observe a day-long silent fast at the Gandhi Bhitiharwa Ashram on November 20th. We may have made mistakes, but we have not committed any crime," Jan Suraaj founder, added.*

*The ruling NDA swept the polls, with the BJP emerging as the single-largest party with 89 seats, and the Janata Dal (United) finishing a close second with 85. Jan Suraaj, making its debut in electoral politics, could not win even a single seat.*

*The swearing-in ceremony on Nitish Kumar took place at Patna's historic Gandhi Maidan, which has hosted his inaugurations in 2005, 2010, and 2015. It is at this venue that Jayaprakash Narayan called for "total revolution" during a speech in 1974.*

*Various Chief Ministers of NDA-ruled states were also present at the oath-taking ceremony. Haryana Chief Minister Nayab Singh Saini, Assam Chief Minister Himanta Biswa Sarma, Nagaland Chief Minister Neiphiu Rio, Andhra Pradesh Chief Minister N Chandrababu Naidu, Uttar Pradesh Chief Minister Yogi Adityanath, and Uttarakhand CM Pushkar Singh Dhami, among others, were present. Bihar Governor Arif Mohammad Khan and LJP (RV) chief Chirag Paswan, among others, participated in the ceremony at Gandhi Maidan.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.